**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | 27/12/2023 | முதல் | 31/12/2023 |
| அறிக்கை எண் : | 103/ 2023 | வெளியீட்டு நாள் : | 26/12/2023 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31° - 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.12.2023 **முதல்** 25.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 31-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/12 | 22/12 | 23/12 | 24/12 | 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 0.7 | 2.2 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 2 | 1 | 0 |
| 25 | 31 | 31 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 27 | 27 | 26 | 27 |
| 23 | 21 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 7 | 8 | 8 | 7 |
| 79 | 80 | 85 | 80 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 100 | 90 | 90 | 90 | 90 |
| 90 | 67 | 56 | 70 | 65 | | 60 | 70 | 70 | 70 | 70 |
| 7 | 5 | 7 | 9 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 10 | 10 | 8 | 6 |
| வட மேற்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 28, 29 மற்றும் 30ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 26°-28° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மேகமூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் மஞ்சள் நிற **ஒட்டுபொறி** வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் **நடமாட்டத்தையும், ஊதா** நிற **ஒட்டுபொறி அட்டை வைத்து அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் நடமாட்டத்தையும்** கண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 6 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து

கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், பருத்தி, கால்நடை.**

**மிளகாய்:**
மிளகாய் பயிரில் பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் விடுவதைத் தூண்டவும் நட்ட 60 அல்லது விதைத்த 100வது நாளில் ஒரு முறையம் மேலும் 30 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி கிராம் என்ற அளவில் வளர்ச்சி ஊக்கி (என்ஏஏ) கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.25 மிலி டிரையகான்கைடனால் கலந்து தெளிக்க வேண்டும்.

**பருத்தி:**
நிலவும் பருவச் சூழ்நிலையில் பருத்திப் பயிரில் புள்ளிக் காய்ப்புழுக்களின் தாக்குதல் தென்படக்கூடும் இளம் புழுக்கள் பருத்தி பயிரைத் தாக்குவதால் குருத்துப் பகுதி வாடிக் காய்ந்து தொங்கும்.

மலரும் தருணத்தில் மொட்டுகளையும், பூக்களையும் தாக்கி சேதம் விளைவிக்கும். அவற்றில் ஓட்டைகள் இருக்கும். தாக்கப்பட்ட மொட்டுக்கள் மலராமலேயே விழுந்து விடும்.

பூச்சி தாக்கப்பட்ட மொட்டு, பூ ஆகியவற்றை சேகரித்து அகற்ற வேண்டும்.

இதனைகட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**
நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு கானை நோய் வர வாய்ப்பு உள்ளது. இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்கானை வாய்க்கானை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.